தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
மோட்டார் வாகன விபத்து கோருரிமைத் தீர்ப்பாயம், கடலூர்

M.C.O.P. No. 1976 / 2018

**எதிர்**மனுதாரர் தரப்பு **1-**வது சாட்சியின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வில்வேந்திரன் | வயது | : 52 |
| தந்தை/கணவர் பெயர் | : சம்மந்தம் | தொழில் | : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : கோண்டுர் | ஜாதி | : ------ |
| தாலுக்கா | : கடலூர் | சமயம் | : ------ |
| மாவட்டம் | : கடலூர் | மொபைல் | :9498153841 |

சட்டம் 49/1969ன் விதிமுறைகளின்படி **13.02.2026** நாளாகிய இன்று செல்வி**. R.**தனம்**, B.A., B.L.,** மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய நீதிபதி**,** கடலூர், அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை**:**

நான் தற்போது நெல்லிகுப்பம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்தில் இருந்து நெல்லிகுப்பம் காவல்நிலைய குற்ற எண்.02/2018 வழக்கின் ஆவணங்களுடன் சாட்சி கூற சம்மன் வந்ததன் பேரில் சாட்சி கூற வந்துள்ளேன். குற்ற எண்.2/2018 சிடி பைல் வைத்துள்ளேன். மேற்படி குற்ற எண்.2/2018 வழக்கின் சம்பவ நாள் 24.12.2017. முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த நாள் 03.01.2018. உமர் என்பவர் 03.01.2018 அன்று கொடுத்த புகாரின் பேரில் முதல்தகவல் அறிக்கை அன்றை தினம் பதிவு செய்யப்பட்டது. மேற்படி குற்ற வழக்கில் புலன் விசாரணை செய்யப்பட்டு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இறுதியறிக்கையானது" சாட்சி 1 மோட்டார் சைக்கிள் பின்னால் ஒரு சைடாக அஜாக்கிரதையாக உட்கார்ந்து கொண்டு தவறி கீழே விழுந்துள்ளபடியால் இவ்வழக்கின் சங்கதியை பொறுத்தமட்டில் பிழையுடையதாக கருதி MF ஆக முடிவு செய்து வாதிக்கு ..." என்று குறிப்பிட்டு சங்கதியை பொறுத்து பிழையுடையதாக முடிக்கபட்டுள்ளது. மேற்படி இறுதியறிக்கை எ**.**ம**.**சா**.**ஆ**1** ஆக குறியீடு செய்யப்பட்டது. விபத்து பதிவேட்டிலும் தானாக கீழே விழுந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :

இந்த வழக்கில் நான் புலன்விசாரணை செய்யவில்லை. இந்த வழக்கில் முதல்தகவல் அறிக்கையில் உமர் என்பவர் PY-01-CL-2817 என்ற Passion pro வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து சென்றபோது விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எந்தெந்த சாட்சிகளை விசாரித்து வழக்கு பிழையுடையது என்று இறுதியறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சம்பவ சாட்சிகள் முகமது காசிம் மகன் சபேர், அப்துல் மாலிக் மகன் அசேன். அவர்களின் வாக்குமூலம் எங்கள் வழக்கு கோப்பில் உள்ளது. விபத்து நடந்தது உண்மை என்றும், மேல்அதிகாரிகள் அறிவுறுத்தலின் பேரில் வழக்கை விரைந்து முடிக்க வேண்டும் என்பதற்காக தவறான இறுதியறிக்கை தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு RCS நோட்டிஸ் சார்வு செய்ததற்கான ஒப்புதல் சீட்டை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகார்தாரருக்கு அறிவிப்பு சார்வு செய்திருந்தால் அவர் தகுந்த நீதிமன்றத்தில் முறையிட்டிருப்பார் என்றால் சரிதான். பொதுவாக விபத்து நடந்தால் மருத்துவமனையில் இருந்து எப்போது தகவல் நிலையத்திற்கு வரும் என்றால் உடனடியாக அன்றைய தினம் வந்துவிடும். தகவல் வந்தவுடன் காவல்நிலையத்திலிருந்து போலிசார் மருத்துவமனைக்கு சென்று பார்ப்போம் என்றால் சரிதான். இந்த வழக்கில் மருத்துவமனையில் இருந்து வந்த தகவலை கவனக்குறைவாக விட்டுவிட்டதால் புகார்தாரர் காவல்நிலையத்திற்கு 9 நாட்கள் கழித்து வந்து புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை